சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 67/2024**

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 02ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **பக்கிரிசாமி PW1** வாக்குமூலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்.**, சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **பக்கிரிசாமி** | வயது |
| தகப்பனார் பெயர் | | கிராமம் |
| கணவர் பெயர் | | தாலுக்கா |
| தொழில் | | |

02.07.2026

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துதான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன். 26.12.2011 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்தின் கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 27.05.2013 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த அடமான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 23.04.2024 தேதியிட்ட வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 26.04.2024 தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி வாங்க மறுத்து திருப்பப்பட்டஅஞ்சல் கவர் அசல் **வா.சா.ஆ.4** ஆகும். 27.04.2024 தேதியிட்ட தாவா சொத்துக்குரிய வில்லங்க சான்று கணிணி நகல் **வா.சா.ஆ.5** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)